இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

கல்விப்பீடம்

கல்விமாணி (சிறப்பு) ஆரம்பக்கல்வி நிகழ்ச்சித்திட்டம் - 2023/2024

இறுதிப்பரீட்சை

மட்டம் - 05

**EPU5354–ஆரம்பக்கல்விக்கான அழகியல்**

காலம்: இரண்டு (02) மணித்தியாலங்கள்

திகதி:- 13.06.2025 நேரம்:பி.ப 01.30 - பி.ப 03.30

**பகுதி I இல் அனைத்து வினாக்களுக்கும் பகுதி II இல் ஏதேனும் மூன்று (03) வினாக்களுக்கும் விடையளிக்குக.**

## பகுதி – I

1. "படைப்பாற்றல் என்பது மக்கள் பிறவியிலேயே பெற்ற ஒன்றல்ல அனுபவம் மற்றும் கற்றல் மூலம் வளர்க்கப்படுகிறது."

   பிள்ளைகளின் படைப்பாற்றல் விருத்தியை பாடசாலைகள் எவ்வாறு ஆதரிக்க முடியும் என்பது தொடர்பாக இவ்வறிக்கையை கலந்துரையாடுக.

2. ஆரம்பக் கல்வியில் அழகியல் அனுபவத்தை, எவ்வாறு சிறப்பாக வடிவமைக்கப்பட்ட வகுப்பறை சூழல் மேம்படுத்தும் என்பதைச் சுருக்கமாக விளக்குக.

3. இளம் பிள்ளைகளின் மனவெழுச்சி விருத்தியை ஊக்குவிப்பதில் அழகியல் கல்வியின் வகிபங்கை **இரண்டு (02)** உதாரணங்கள் மூலம் ஆராய்க.

4. ஆரம்பக் கல்வியில் கற்பனையை இயல்பாக்குவதற்கு நாடகமும் அரங்கியலும் எவ்வாறு பயன்படுத்தலாம்? உங்கள் கருத்துக்களை விளக்க **இரண்டு (02)** உதாரணங்களைப் பயன்படுத்துக.

5. சிறுவர் சித்திரத்தின் ஒவ்வொரு விருத்திப்படிகளதும் முக்கிய பண்புகளை எழுதுக.

6. சிறுவர் சித்திரத்தின் விருத்திக்கு ஆதரவான மற்றும் ஊக்கமளிக்கும் சூழலை ஆசிரியரொருவர் எவ்வாறு உருவாக்க முடியும் என்பதைச் சுருக்கமாக விளக்குக.

7. ஆரம்ப வகுப்பறையில் நடன நடவடிக்கைகளை விருத்தி செய்யும் போது ஆசிரியர்கள் எதிர்கொள்ளும் **மூன்று (03)** சவால்கள் யாவை?

8. ஆரம்ப பிரிவு அமைப்பில் கணிதக் கருத்தை கற்பிக்க இசை மற்றும் அசைவுகளை எவ்வாறு ஒருங்கிணைப்பீர்கள் என்பதை **மூன்று (03)** உதாரணங்கள் மூலம் விளக்குக.

(05 x 08 = 40 புள்ளிகள்)

## பகுதி – II

9. i. நாடகமும் அரங்கியலில் "நெகிழ்வுத்தன்மை" என்ற கருத்தை விபரிக்குக. (08 புள்ளிகள்)

   ii. நாடகமும் அரங்கியலில் ஆரம்ப கலைத்திட்டத்தை ஒருங்கிணைப்பதன் தாக்கத்தை பின்வரும் தலைப்புக்களின் கீழ் கலந்துரையாடுக.

   (அ) குழந்தைகளுக்கான ஊக்கல் (04 புள்ளிகள்)

   (ஆ) மகிழ்ச்சி (Enjoyment) (04 புள்ளிகள்)

   (இ) கற்றலில் ஒட்மொத்த ஈடுபாடு (Overall engagement in Learning) (04 புள்ளிகள்)

10. i. பின்வரும் தலைப்பை ஆராய்வதற்கு பிள்ளைகள் சிறுவர் சித்திரத்தை எவ்வாறு ஒரு ஊடகமாக பயன்படுத்தலாம் என்பதைப் பற்றி கலந்துரையாடுக.

(அ) சுய வெளிப்பாடு **(04 புள்ளிகள்)**

(ஆ) தொடர்பாடல் **(04 புள்ளிகள்)**

ii. "ஆரம்ப பாடசாலை பிள்ளைகளின் வரைதல், பிள்ளையின் படைப்பாற்றல் மற்றும் வெளிப்பாட்டுத்திறனை விருத்தி செய்வதற்கான முக்கிய செயற்பாடாக கருதப்படுகிறது."

வரைதல் செயன்முறையின் மூலம் பிள்ளைகள் அடையும் விருத்தி அம்சத்தைப் பற்றி ஆராய்க.

**(12 புள்ளிகள்)**

11. i. இசை மற்றும் அசைவு நடவடிக்கைகளால் இளம் பிள்ளைகளுக்கு ஏற்படும் உடல் வளர்ச்சி நன்மைகளைப் பற்றி கலந்துரையாடுக. உங்கள் பதிலை ஆதரிக்க பொருத்தமான செயற்பாடுகளின் மூலம் உதாரணங்களை வழங்குக.

**(10 புள்ளிகள்)**

ii. இசை மற்றும் அசைவு நடவடிக்கைகளுக்கு ஆதரவான சூழலை உருவாக்குவதில் ஆசிரியர் எத்தகைய சவால்களை எதிர்கொள்கிறார்கள், அவற்றை எவ்வாறு நிவர்த்தி செய்வது என விளக்குக.

**(10 புள்ளிகள்)**

12. i. ஹொவார்ட் ஹார்டினரின் (Howard Gardner) பன்முக நுண்ணறிவுக் கோட்பாடு இளம் பிள்ளைகளில் அழகியல் சார் பாராட்டை எவ்வாறு ஊக்குவிக்கும் என்பது பற்றி கலந்துரையாடுக.

**(10 புள்ளிகள்)**

ii. இசை சார் நுண்ணறிவை விபரிக்குக மற்றும் ஆரம்ப பாடசாலை ஆசிரியர்கள் இவ் நுண்ணறிவை எவ்வாறு விருத்தி செய்யலாம் என்பதைப் பற்றி கலந்துரையாடுக.

**(10 புள்ளிகள்)**

13. i. ஆரம்ப தரத்தில் ஏதேனும் பாடத்திற்குரிய கருப்பொருளை தெரிவு செய்க அழகியல் மற்றும் படைப்பாற்றல் விருத்தியை மேம்படுத்த **மூன்று (03)** செயற்பாடுகளை உள்ளடக்கிய பாடத்திட்டத்தை உருவாக்குக, அவற்றிற்கு பின்வரும வழிகாட்டுதலைப் பயன்படுத்துக.

தரம், பாடம், கருப்பொருள், தேர்ச்சிகள், கற்றல் பேறு, பாட அணுகுமுறை, படிமுறை மற்றும் கணிப்பீடு

**(10 புள்ளிகள்)**

ii. நடன நடவடிக்கைகளில் இளம் பிள்ளைகளை ஈடுபடுத்துவது சமூக உணர்திறனை (Sensitivity) விருத்தி செய்யும். இக்கூற்றுடன் உடன்படுகின்றீரா? உமது பதிலை நியாயப்படுத்துக.

**(10 புள்ளிகள்)**

- **முழுப்பதிப்புரிமையுடையது** -



55